திரு. எ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், போக்குவரத்துத்துறை அமைச்சர் இங்கே வரவில்லை. போக்குவரத்துத் துறை அமைச்சர் அமைச்சரவையிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார் என்ற தகவல் வருகிறதே, அதைப்பற்றிய தகவலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

(2) கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம் முலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளியை மூட இருப்பதும் அப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியமும் குறித்து

THIRU J. JAMES : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the proposed closure of Allwin Middle School, Mulagumoodu, Thuckalay Education district, Kanyakumari district and the necessity to protect the teachers and students of that school.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கன்னியாகுமரி மாவட்டம், மூலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளிக்கு 1974 ஆம் ஆண்டு மே மாதம் முடிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பள்ளியின் நிர்வாகி 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசுக்குக் கொடுத்துள்ள மனுவொன்றில், இப்பள்ளிக்கு அருகாமையிலுள்ள நான்கு ஆரம்பப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக மேம்பாடு செய்து கல்வி அலுவலர்கள் ஆணையிட்டதால், தம் பள்ளியில் 6, 7 மற்றும் 8 வகுப்புகளில் மாணவர் வருகை குறைந்துவிட்டதென்றும், அதன் காரணமாகத் தம் பள்ளியைத் தொடர்ந்து நடத்தமுடியாமல் போகுமென்று தெரிகிற தென்றும், ஆகவே அடுத்த கல்வி ஆண்டான 1974-75 முதல் தம் பள்ளிக்கான அங்கீகாரத்தை நீடிப்பதற்குத் தாம் விண்ணப்பம் செய்யப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். அப்பள்ளியை அடுத்தக் கல்வி ஆண்டு முதல் மூடிவிடவேண்டிய சூழ்நிலை ஏற்படின் பள்ளியில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களுக்குத் தக்க மாற்று வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென அரசைக் கேட்டுள்ளார்.

அரசு இம்மனுவின்மீது பள்ளிக் கல்வி இயக்குநரின் விரிவான அறிக்கையைக் கேட்டுள்ளது. இப்பள்ளியினை அடுத்த ஆண்டு முதல் தொடர்ந்து நடத்த வாய்ப்பு உண்டா எனவும், இல்லையெனில், இப்பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களை வேறு பள்ளிகளில் பணியிலெடுத்துக்கொள்ளுவதற்கும், பிள்ளைகளையும் மற்ற பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதற்குமான சாத்தியக்

கூறுகளையும் ஆய்ந்து அரசுக்குத் தெரிவிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். பள்ளிக் கல்வி இயக்குநரும் மேலே கூறப் பட்டவாறு தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இது பற்றி விளக்கமான அறிக்கையை அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார். பள்ளிக் கல்வி இயக்குநரின் விரிவான அறிக்கை கிடைத்தவுடன் இதுபற்றி அரசு ஆராய்ந்து தக்கதொரு முடிவெடுக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கூடத்திலே, தலைமையாசிரியராக இருப்பவர் அந்தப் பள்ளிக்கூடத்தில் மானேஜராகவும் தான் இருக்கிறார். அதோடு அவருடைய மனைவியும் கூட அந்தப் பள்ளி யிலே ஆசிரியராக வேலை பார்க்கிறார். இருவரும் இந்த ஆண்டு ஓய்வு பெறுகிற காரணத்தினாலே இனிமேல் தொடர்ந்து அவர்கள் நிர்வாகத் தினை நடத்தத் தேவையில்லை என்பதால்தான் அவர்கள் அதை நடத்து வதற்கு முயற்சிக்கவில்லை என்று கூறுகிறார்கள். அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கமே அந்தப் பள்ளியை ஏற்று நடத்துவதற்கு முயற்சி செய்யுமா ? இல்லையென்றால், அந்தப் பள்ளிக்கூடத்திலே பணிபுரிகின்ற பல்வேறு ஆசிரியர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே அருகாமையிலே இருக்கின்ற அரசுப் பள்ளிகளில் அவர்களு டைய சர்வீஸ் பிரேக் ஆகாமல் அவர்களை அமர்த்துவதற்கும் மாற்றுவேலை அவர்களுக்கு அளிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிதான் நான் குறிப்பிட்டேன். அந்த இரண்டு சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுக்கும்படி பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் மூலமாக அந்த மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார். வேறு முறையிலே அதைத் தொடர்ந்து நடத்து வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதும் ஆராயப்படவேண்டும். அதற்கும் சட்டம் இடம் கொடுத்தால் ஆராயலாம். அப்படியில்லையென்றால், பள்ளி யிலே வேலைசெய்கின்ற ஆசிரியர்களை வேறு பள்ளிகளிலே அமர்த்தவோ அல்லது பிள்ளைகளை வேறு இடங்களிலே சேர்க்கவோ ஆராயப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்தபிறகு மீண்டும் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

(3) 1974-75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, 1974-75 ஆம் வருஷத்திய பட்ஜெட்டை நிதியமைச்சராக இருக்கும் முதல்வர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கையின் பேரிலே